Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 04 (20 - 09 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 215

## யுத்தத்தினால் பாதிப்படைவது பெரும்பாலும் சிறுவர்களே

உள்நாட்டு யுத்தங்களினால் பெருமளவில் பாதிக்கப்படுவது சிறுவர்களே என்று யுனிசெப் நிறுவன பணிப்பாளர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் சிவில் யுத்தங்கள் பெரியவர்களைக் காட்டிலும் சிறுவர்களையே அதிகம் பாதிக்கின்றது. சோமாலியாவில் சராசரியாக ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் பத்துப் பிள்ளைகள் இருக்கின்றனர் என்று யுனிசெப் நிறுவனப் பணிப்பாளர் கூறியுள்ளார். அத்துடன் உலகச் சிறுவர் தொகையில் கால்வாசிப் பங்கினர் தெற்கு ஆசியப் பகுதியில் வசிப்பதாகவும், இவர்களில் அநேகமானோர் வறுமை, பொருளாதார வசதியின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு பெருகிவரும் ஆதரவு

# மத்திய, மாநில அரசுகள் கலக்கம்

[சென்னை]

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்குப் பெருகிவரும் ஆதரவு குறித்து இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் பெரும் கலக்கமடைந்துள்ளதாகவும், இதனை எவ்வாறு தடுத்து நிறுத்துவதெனத் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் தற்பொழுது புலிகளுக்கு ஆதரவான ஊர்வலங்கள் சென்னையிலும் ஏனைய பகுதிகளிலும் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன. இதில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, புலிகளுக்கு ஆதரவாக மேற்கொள்ளப்படும் இவ் ஊர்வலங்களில் தலைவர் பிரபாகரனின் பெரிய அளவினதான உருவப் படங்கள் கொண்டு செல்லப்படுவதும், தலைவர் பிரபாகரனையும், விடுதலைப் புலிகளையும் ஆதரித்து கோஷங்கள் முழங்கப்படுவதும் வழமையாக மாறிவருகின்றது.

இவ்வாறாகப் பெருகி வரும் புலிகளின் ஆதரவு குறித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கம் பெரிதும் கலக்கமடைந்துள்ளதாகவும் இந்திய மத்திய அரசு இது குறித்து விசேட கவனம் கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் தமிழக கரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-பாட்டாளி மக்கள்கட்சி உறவு குறித்து ஆராயப்படும்

### - இந்திய உள்துறை இணை அமைச்சர்

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உள்ள ஈடுபாடு குறித்து தமிழக அரசிடமிருந்து முழு அறிக்கையை மத்திய அரசு கோருமென்று மத்திய உள்துறை இணை அமைச்ச எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

கொச்சியில் இருந்து சென்னை வந்துள்ள அவர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசும்போது, மாநில அரசின் பணிப்புரையின் அடிப்படையிலேயே நடவடிக்கை மேற்

புலிகளுக்கு ஆதரவாகவும், பிரிவினை வாதத்தை ஆதரித்தும் எழுப்பப்பட்ட கோரிக்கை குறித்துச் செய்தியாளரின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றுக்கு ஆதரவாகவும், உடந்தையாகவும் இருப்பவர்களுக்கும் அதே முடிவு தான் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டார். தகுந்தகாரணமில்லாமல் எந்த அமைப்பையும் மத்திய அரசு தடை செய்யாது என்றும், அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

கரையோரக் கண்காணிப்பு குறித்து மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருவதாக மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளித்தார்-

## தமிழ் நாட்டிற்கு மத்திய ரிசேவ் படை

தமிழ் நாட்டில் சட்டத்தை

இதில் ஒரு அணி சென்னை

## தியாக தீபம் திலீபனுக்கு யாழ். வர்த்தகர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைப் போராட்டத்தில் தியாக மரணமடைந்த தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை ஒட்டி ஐந்தாம் நாளாக நேற்றும் பெரும்திரளானமக்கள் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்றய அஞ்சலி நிகழ்ச்சிகளில் தியாகி திலீபனின் நினைவாக குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சிகளிற்கு அதிகளவு மக்கள் அணிதிரண்டு வந்திருந்தனர். ஆண்கள் பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இந்த உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் பெருமளவில் கலந்து கொண்டனர். யாழ். நகரிலும் ஏனைய புறநகர்ப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்களை மூடிவிட்டு வர்த்தகர்கள் உண்ணாவிரத நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டனர்.

அனைத்து அடையாள உண்ணாவிரதப் பந்தல்களும் நிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடிசைகள் அமைப்பு

தென்னிந்திய திருச்சபை மானிப்பாயில் அகதிகளாக தங்கியுள்ள மக்களுக்கு பல குடிசைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் முதற் கட்டமாக மானிப்பாய் பழைய தபாலகத்திற்கு முன்னால் தற்போது 15 குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன இவை பூர்த்தியானதும் மேலும் 50 குடிசைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (42)

## உணவு முத்திரை பணத்திற்கு மேலும் 20 கோடி தேவையாம்

(கொழும்பு)

உணவு முத்திரை மண்ணெண்ணெய் முத்திரை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இருபது கோடி ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை புனர்வாழ்வு புனர் நிர்மான ராஜாங்க அமைச்சர் பி. தயாரத்தினா அடுத்த மாதத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார் ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து முன்நூற்றி முப்பத்தியிரண்டு குடும்பங்களுக்கான உணவு முத்திரை, மண்ணெண்ணெய் முத்திரை தேவைகளைச் சமாளிப்பதற்கு இத் தொகை தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமில்

## தியாகி திலீபன் நினைவாக இன்றைய சிரமதானபணிகள்

(நமது நிருபர்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இன்று இடம் பெறவுள்ள சிரமதானப்பணிகளின் விபரம் வருமாறு

சாம்சன் குடியிருப்பு மக்களால் சாம்சன் குடியிருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன

சங்கானை வட்டப்பிரிவில் மூளாய் செல்வா சனசமூக நிலைய வீதி திருத்த வேலை மேற்கொள்ளப்படவுள்ளது

கோப்பாய் வட்டப்பிரிவில் உரும்பராய் சந்தைப்பகுதி சிரமதான மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

பருத்தித்துறை வட்டப்பிரிவில் பூமகள் சனசமூகநிலைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிலையெடுக்க முன்னரே நிலைதடுமாறி ஓடினர்

கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தமிழக கரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்றய அஞ்சலி நிகழ்ச்சிகளில் தியாகி திலீபனின் நினைவாக குடா நாட்டின்

# உறவு குறித்து ஆராயப்படும்

## -இந்திய உள்துறை இணை அமைச்சர்

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உள்ள ஈடுபாடு குறித்து தமிழக அரசிடமிருந்து முழு அறிக்கையை மத்திய அரசு கோருமென்று மத்திய உள்துறை இணை அமைச்ச எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

கொச்சியில் இருந்து சென்னை வந்துள்ள அவர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசும்போது, மாநில அரசின் பணிப்புரையின் அடிப்படையிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

அண்மையில் சென்னையில் நடாத்தப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாட்டில் புலிகளுக்கு ஆதரவாகவும், பிரிவினை வாதத்தை ஆதரித்தும் எழுப்பப்பட்ட கோரிக்கை குறித்துச் செய்தியாளரின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்

தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றுக்கு ஆதரவாகவும், உடந்தையாகவும் இருப்பவர்களுக்கும் அதே முடிவு தான் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டார். தகுந்தகாரணமில்லாமல் எந்த அமைப்பையும் மத்திய அரசு தடை செய்யாது என்றும், அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

கரையோரக் கண்காணிப்பு குறித்து மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருவதாக மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளித்தார்-

## தமிழ் நாட்டிற்கு மத்திய ரிசேவ் படை

தமிழ் நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் கண்காணிப்பதற்காக மத்திய ரிசேவ் படையைச் சேர்ந்த மூன்று பிரிவுகள் சென்னை வந்துள்ளன.

இதில் ஒரு அணி சென்னையில் இருக்கும் என்றும், மற்ற அணிகள் மாவட்டங்களுக்கு அனுப்பபடுமென்றும் பொலிஸ் துறையினர் தெரிவித்துள்ளார்கள்.

# தமிழ் நாட்டில் தன்னாட்சி கோரிய ஆயிரக்கணக்கானோர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டில் தன்னாட்சி கோரினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் நேற்று இரண்டாவது நாளாக தமிழ் நாட்டு பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் கைது செய்யப்பட்டனர்.

பதினாறு அரசியல் கட்சித் தலைவர்கள் மீது தேசத்துரோகக் குற்றச்சாடடு சுமத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை வரை 4046 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினமும், நேற்றும் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 6,000 எனப்படுகிறது இவர்களில் பலர் தடுப்புக் காவல் சட்டங்களுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை கோரி பாட்டாளி மக்கள் கட்சி சென்னையில் நடாத்திய மாநாட்டைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் மாநாட்டின் தீர்மானம் தேசத்துரோகமானது என்பதை மறுத்தார்.

## நெடுமாறன் மீது தேசத்துரோக குற்றம்

தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் தேசிய கட்சித் தலைவர் ப. நெடுமாறன் வரும் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்படவுள்ளார்., இத்தகவலை அதிகாரிகள் தெரியப்படுத்தினார்கள்.

# அரசின் இன அழிப்பு குறித்து ஐ. நா. விடம் முறையீடு

## -பொருத்தமான தடை விதிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா படையினரின் ஆதரவோடு கொலைக் கும்பல்களால் கடத்தப்பட்டு காணாமற் போன தமிழர்கள் பற்றி ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும் எனக்கோரும் நாற்பது பக்க அறிக்கை ஒன்று ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் இருந்து கிடைக்கும் செய்திகளை மேற்கோள்காட்டி சென்னையிலிருந்து வெளியாகும் இந்து வெளியிட்டுள்ள தகவலில் மேலும், சிறிலங்காவில் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் கடந்த நாற்பதாண்டு காலமாக மொழி, கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றுடன் சிவில் உரிமை மறுப்பு என்பனதொடர்பாக சிறிலங்கா அரசு இழைத்துவரும் அநீதிகள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் புகாரில் ஐ. நா. பொதுச் செயலாளர் சிறிலங்காவில் இடம்பெறும் அனாவசியக் கைதுகள், காணமற் போதல், கொல்லப்படுதல் மற்றும் இனப்படுகொலை முயற்சிகள் பற்றி விசாரணை நடத்த வகைசெய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

சட்ட அமுலாக்கல் தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உணவு முத்திரை பணத்திற்கு மேலும் 20 கோடி தேவையாம்

(கொழும்பு)

உணவு முத்திரை மண்ணெண்ணெய் முத்திரை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இருபது கோடி ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை புனர் வாழ்வு புனர் நிர்மான ராஜாங்க அமைச்சர் பி. தயாரத்தினா அடுத்த மாதத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார் ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து முன்நூற்றி முப்பத்தியிரண்டு குடும்பங்களுக்கான உணவு முத்திரை, மண்ணெண்ணெய் முத்திரை தேவைகளைச் சமாளிப்பதற்கு இத்தொகை தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வலிமேற்குப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஐந்திற்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன இவை பண்டத்தரிப்பு, சுழிபுரம், திருவடிநிலை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன சேதவிபரம் பற்றி தெரியவரவில்லை.

இதேவேளை மாதகலில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பண்டத்தரிப்பு பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்

நேற்றுப் பிற்பகல் நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடி சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட பலர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கு அருகேயுள்ள கல்லடி கிராமம் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தினராலும் பொலிசாராலும் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

ஆண்களும் பெண்களும் சிவானந்த வித்தியாலய மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

இவர்களில் பலர் விசாரணைக்கென முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் இவர்களில் பெண்களும் அடங்குவர் என்றும் தெரியவருகின்றது.

## களுத்துறை தடுப்பு முகாமில் ஜே. வி.பியினர் தப்பி ஓட்டம்

கடுமையான பாதுகாப்புக்களுடன் இருந்த களுத்துறை தடுப்பு முகாமிலிருந்து ஜே. வி. பியைச் சேர்ந்த பத்துப்பேர் நேற்று முன்தினமிரவு தப்பிப் போயுள்ளனர். நேற்றுமுன்தினமிரவு தாம் இருந்த அறைக்குள்ளாகவே சுரங்கம் ஒன்றைத் தோண்டித் தப்பிச் சென்றுள்ள இவர்கள் காணாமற் போனது நேற்றுக் காலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

# தியாகி திலீபன் நினைவாக இன்றைய சிரமதானபணிகள்

(நமது நிருபர்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இன்று இடம் பெறவுள்ள சிரமதானப்பணிகளின் விபரம் வருமாறு

சாம்சன் குடியிருப்பு மக்களால் சாம்சன் குடியிருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன

சங்கானை வட்டப்பிரிவில் மூளாய் செல்வா சனசமூக நிலைய வீதி திருத்த வேலை மேற்கொள்ளப்படவுள்ளது

கோப்பாய் வட்டப்பிரிவில் உரும்பராய் சந்தைப்பகுதி சிரமதான மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

பருத்தித்துறை வட்டப்பிரிவில் பூமகள் சனசமூகநிலைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிலையெடுக்க முன்னரே நிலைதடுமாறி ஓடினர்

## பண்டத்தரிப்பில் படையினருக்குநேர்ந்தகதி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புச் சந்திப் பகுதிக்கு முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் நிலை எடுக்க முன்னரே நிலைதடுமாறியுள்ளனர். இதனால் வந்தவேகத்தில் தமது முன்னைய நிலைகளுக்கு பின்வாங்கி ஓட்டமெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை பண்டத்தரிப்பு சந்தியையும் அதனை அண்டிய சிறுபகுதிக்கும் முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதியில் பூரணமாக நிலையெடுத்து நிற்கமுடியவில்லை அதற்கு முன்னரே விடுதலைப்புலிகளின் உக்கிர எதிர்த்தாக்குதல் காரணமாக பின்வாங்கி ஓட்டமெடுத்துள்ளனர்.

இப் பகுதிகளில் உள்ள வயல் வெளிகளிற் கூடாக செயின் டாங்கிகள் சகிதம் படையினர் நகர்ந்தமைக்கான பல தடையங்கள் காணப்பட்டன. மரவள்ளித் தோட்டங்கள், வாழைத்தோட்டங்கள் ஆகியவற்றை ஊடறுத்துக்கொண்டும், வேலிகள், மதில்களை இடித்துக்கொண்டும் படையினர் நகர்ந்து வந்திருந்தமைக்கான அடையாளங்களையும் அவதானிக்க முடிந்தது. பண்டத்தரிப்பு சந்தியில் உள்ளகட்டடங்களில் படையினர் சிறிது நேரம் தங்கியிருந்தனர். இப்பகுதிகளில் உள்ள மதில்களில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட வாசகங்கள் சிலவற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் தேடியழிக்கும் பணியாம்

(கொழும்பு)

பண்டத்தரிப்பைக் கைப்பற்றிய பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளையும் அவர்களின் மறைவிடங்களையும் தேடி அழிக்கும் முயற்சியில் நேற்று தொடர்ந்தும் ஈடுபட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி லங்காபுவத் அறிவித்தது.

நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட "சதுரங்கம்" என்ற யுத்த நடவடிக்கையின்போது பண்டத்தரிப்பு கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டது.

இப்பகுதிகளில் பாதுகாப்புப் படையினர்ஜொனிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண வெட்டுக்கு காரணம் யார்? பத்திரிகையாளர் கேள்வி

## பதிலலிக்க முடியாது செயலாளர் திணறல்

அகதிகளுக்கான உலர்உணவு நிவாரணம் திடீரென சரிபாதியாகக் குறைக்கப்பட்டு அகதிகளைப் பட்டினி போட்டுள்ளமைக்கு காரணமானவர்களை அம்பலப்படுத்துமாறு கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிநாட்டு, கொழும்பு பத்திரிகையாளர்கள் வலியுறுத்தினர்.

அரசு ஒதுக்கிய பணம் போதாது எனத் தெரிந்திருந்தும் நேரகாலத்துடன் தேவையான பணத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்படாததற்கு பொறுப்பு யார்? உரியகாலத்தில் அதைப் பெறத் தவறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

**குளம் அமைத்து வளம் பெருக்குவோம்**

## வரி விளம்பரம்

### அனுமதி மாதிரிப் பரீட்சை [ஆண்டு 6]

ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) இன்று ஞாயிறு காலை மு.ப. 8.00, மு.ப. 11.00 மணி நேரங்களில் நடைபெறும் வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3197)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சியில் க. பொ. த. (சா/த) சித்தியடைந்தவர்கள் சேரலாம். நேரில் பயில முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி—யாழ்ப்பாணம். (5044)

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் பழுதுபார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச்சீட்டு இல்லாமல் பொருள் பெறமுடியாது. ஜீவிதா தொழில் நுட்பக் கூடம் ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/ 5082)

பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறி

### 1991/92 - நேர்முகப் பரீட்சை

பட்டப்பின் கல்விடிப்புளோமாப் பரீட்சையிற் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப்பரீட்சை ஒக்டோபர் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையிற் சித்தியடைந்த...

## அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்று தீர்வைச் சமர்ப்பிக்க விரும்பினால் அதனைத் தெரிவுக் குழு முன்வைப்போம் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்றும், அரசாங்கம் விதித்துள்ள நான்கு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் தெரிவுக் குழுவிடம் யோசனை சமர்ப்பிக்கத் தடையேதும் இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதுவே அரசாங்கத்தின் நோக்கம் என்றும், இது தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழு தற்போது கூடி ஆராய்ந்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

## அகதிகள் நிவாரண வெட்டு ஜனவரியிலேயே நீக்கப்படும்

### - அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

செப்டம்பர் முதலாம் திகதி முதல் அரைவாசியாகக் குறைக்கப்பட்ட இடப்பெயர்ந்தோருக்கான நிவாரண உதவி அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மீண்டும் முழு அளவில் வழங்கப்பட இருக்கிறது என்று புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

அமைச்சின் செயலாளரான ராஜா சமரநாயக்கா அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாட்டில் மேலும் கூறுகையில் இடைப்பட்ட நான்கு மாதகாலத்திற்கும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அரசாங்க அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளையும் கோரி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## ஈராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 27-06 1973

தாயக விடிவில் 20-09-1990

### வீரவேங்கை கண்ணன்

(கனகசபாபதி பரமானந்தன்)

கனகசபாபதி பெற்றெடுத்த கண்ணா!
கருணையுள்ளம் படைத்தவன் நீ மன்னா
கயவனைக் கலைத்திடச் சென்றாய்
கழுத்தினில் மாலையோடு வந்துநின்றாய்.

யாழ் போற்றும் யாழ்ப்பாணத்தில்
யாழ் கோட்டை நிலத்தினிலே
யாரையடா வென்று விட்டு
யார் முகத்தை காண வந்தாய்.

## இளைஞர்கள், யுவதிகளை உடன் விடுதலை செய்

### -தொழிலாளர் தேசியசங்கம் கோரிக்கை

(ஹற்றன்)

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்கள், யுவதிகள் அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விசாரணை செய்து விடுதலை செய்ய வேண்டுமென தொழிலாளர் தேசிய சங்கம் கேட்டுள்ளது.

தொ. தே. சங்கத்தின் 11-வது பேராளர் மாநாடு ஹற்றனில் நடைபெற்ற போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் மலையகத்தில் நகர்ப்புற, தோட்டப்புற இளைஞர்கள் சந்தேகத்தின் பேரிலும் போட்டி பொறாமை காரணமாக அனுப்பப்பட்ட புகார்கள் காரணமாகவும் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஊவா பகுதியில் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பல பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விசாரணை செய்து விடுதலை செய்யப்படுவர் என உறுதியளிக்கப்பட்டபோதும் இதுவரை எவரும் விடுதலை செய்யப்படவில்லை. எனவே அரசாங்கம் இவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் இக்கட்சி கேட்டுள்ளது.

## ஆசிரியர் சம்பள கடன்; கட்டுநிதி கிடைக்கும்

(நல்லூர்)

வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின்கீழ் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பளக் கடன் முற்பணம் வழங்குவதற்கான கட்டுநிதியை வழங்க வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

கட்டுநிதியை மாகாணக் கல்வி அமைச்சிடமிருந்து பெற்று சம்பளக்கடன் முற்பணத்தை வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் எஸ். வேலாயுதபிள்ளை சுற்றறிக்கை மூலம் அனைத்துக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

கட்டு நிதியைப் பெறுவதற்கு 1- 3- 91 க்குப் பின் வழங்கப்பட்ட கடனுக்குரிய கடன் கழிவுகளையும், அதற்குரிய வட்டியையும் உடன் தமக்கு காசோலை மூலம் அனுப்பி வைக்குமாறும் பிரதம கணக்காளர் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார் மேலும் கட்டுநிதியை மாகாண சபையிலிருந்து பெறாமல் எதுவித கடன்களையும் வழங்கக் கூடாது என்றும் அவர் பணித்துள்ளார்

## விவசாய பாடசாலை வவுனியாவிற்கு மாற்றம்

முன்னர் வவுனியாவில் இயங்கி வந்ததும், 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிளிநொச்சிக்குத் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டதுமான விவசாய பாடசாலையை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மீண்டும் வவுனியாவில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### எழுது வினைஞர் தேர்வுப் பரீட்சை

பொது எழுது வினைஞர் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் கார்த்திகை மாதம் நடைபெறும்என யாழ். மாவட்ட பிரதேசஆணையாளர்து. வைத்தியலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனினும் மேற்படிபரீட்சைக்...

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார தரிசிப்பாளர்கள், கிராமிய சுகாதார உதவியாளர்கள் பௌதிக சிகிச்சையாளர்கள் ஆகியோருக்கான ஒன்று கூடல் கூட்டம் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு இணுவில் அமெரிககமிசன்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வட கிழக்கு சுகாதாரதரிசிப்பாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்...

## வவுனியாவில் ஷெல் வீச்சு 3 பொது மக்கள் காயம்

(வவுனியா)

வவுனியா பேயாடி கூழாங்குளம் பகுதியிலிருந்து கடந்த வியாழனன்று பொதுமக்கள் குடியிருப்புகள் மீது பலத்த தாக்குதல் நடாத்தப்பட்டது. இப் பகுதியிலிருந்து இரு பவல் கவசவாகனங்கள் தாக்குதலில் ஈடுபட்டன.

இதேவேளை வவுனியா நகர இராணுவ முகாமிலிருந்து மேற் கொள்ளப்பட்ட கண் மூடித்தனமான எறிகணைவீச்சினால் மூன்று பொது மக்கள் காயமடைந்தனர்

இவர்களில ஓமந்தை நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா என்னும் குடும்பஸ்தரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

## கசிப்பு காய்ச்சியோர் முகாமிலிருந்து நீக்கம்

(வவுனியா)

கசிப்பு உற்பத்தியிலும்விற்பனையிலும் ஈடுபட்டு வந்த ஐவர் மடு திருப்பதி அகதி முகாமிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதி முகாமில் தங்கியிருந்தபடியே இவர்கள் தொடர்ந்து இத்தொழிலைச் செய்து வந்தனர் எனவும் இதன் பாதிப்பை உணர்ந்த அகதி முகாம் நிர்வாகம் இந்த ஐவரையும் வெளியேற்றியது எனவும் தெரியவருகிறது.

இப்போது வேறு ஒரு பகுதியில் தங்கியிருக்கும் இந்த ஐவரும் புதிய அகதி முகாமில் தஞ்சம் கோருவதற்கு முயற்சி செய்து வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

(தி)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற ஆட்சிப் பிரதேச எல்லையுள் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு, விசர்நாய் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஐந்தாம் சுற்று நாளை தொடக்கம் ஒக்டோபர் இரண்டுவரை குறிப்பிட்ட நிலையங்களில் இடம்பெறவுள்ளது

நாளை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12 30 மணிவரை யாழ் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானம் அருகாமையிலும், வைத்தீஸ்வரா வித்தியாலச் சந்தியிலும் தடுப்பூசிஏற்றப்படும் பிற்பகல் 2 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணிவரை சப்பல் வீதி மூன்றாம் குறுக்கு வீதி சந்தியிலும், பசார்- பழைய காரைநகர் பஸ்நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

இவ்வாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

### ஒய்வூதியம் பிரதேச செயலகங்களில்

(கொழும்பு)

ஒய்வூதியக் கொடுப்பனவுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பன்முகப்படுத்தப்பட இருப்பதாக தெரியவருகிறது இதற்கான தொடக்க நடவடிக்கையாக ஒய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கை அனைத்தும் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

### நிகழ்ச்சி நேரமாற்றம்

தியாகி திலீபன் நினைவாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் நாளை காலை பத்து மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என முன்னர் அறிவித்த நினைவுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் மாலை மூன்று மணிக்கு நடைபெறும் என இதன் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## விஜிதா அரைக்கும் ஆலை!

மிளகாய் மற்றும் அரிசி, குரக்கன், உழுந்து, பயறு போன்ற தானிய வகைகள் உடனுக்குஉடன் அரைத்துக்கொடுக்கப்படும்.

உரிமையாளர்

இ. செல்லத்துரை

24, விதானையார் வீதி,

[ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவகோயிலுக்கு

தடுப்பூசி ஏற்ற படும் பிற்பகல் 2 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணிவரை சப்பல் வீதி மூன்றாம் குறுக்கு வீதி சந்தியிலும், பசார் - பழைய காரைநகர் பஸ்நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

இவ்வாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் நாளை காலை பத்து மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என முன்னர் அறிவித்த நினைவுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் மாலை மூன்று மணிக்கு நடைபெறும் என இதன் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

---

பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறி

## 1991/92 - நேர்முகப் பரீட்சை

பட்டப்பின் கல்விடிப்புளோமாப் பரீட்சையிற் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப்பரீட்சை ஒக்டோபர் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையிற் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப் பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பல்கலைக்கழக அறிவித்தற் பலகையிலும் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
18-09-92-

(சி- 5076)

---



தாயக விடிவில்
20-09-1990

## வீரவேங்கை கண்ணன்
(கனகசபாபதி பரமானந்தன்)

கனகசபாபதி பெற்றெடுத்த கண்ணா!
கருணையுள்ளம் படைத்தவன் நீ மன்னா
கயவனைக் கலைத்திடச் சென்றாய்
கழுத்தினில் மாலையோடு வந்துநின்றாய்.

யாழ் போற்றும் யாழ்ப்பாணத்தில்
யாழ் கோட்டை நிலத்தினிலே
யாரையடா வென்று விட்டு
யார் முகத்தை காண வந்தாய்.

பெற்றோர்கள் பரமானந்தன் என்றனர்
பெரியோர்கள் ஆனந்தன் என்றனர்
சகோதரர்கள் கண்ணன் என்றனர் - உன்
சரித்திரமே கையோங்கி விட்டதடா.

கண்ணா ஈராண்டு கடந்ததடா
கண்ணிமையும் மூடவில்லை
கயவன் இன்னும் ஓயவில்லை - உன்
இன்பமுகமும் இன்னும் அகலவில்லை.

காரைநகர், நீலிப்பந்தனை
புதுறோட்.
இல 913 ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(3253)

---

## வவுனியாவிற்கு மாற்றம்

முன்னர் வவுனியாவில் இயங்கி வந்ததும், 1990ஆம் ஆண்டு குப்பினர் கிளிநொச்சிக்குத் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டதுமான விவசாய பாடசாலையை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மீண்டும் வவுனியாவில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### எழுது வினைஞர் தேர்வுப் பரீட்சை

பொது எழுது வினைஞர் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் கார்த்திகை மாதம் நடைபெறும்எனயாழ். மாவட்டபிரதேசஆணையாளர்து. வைத்தியலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனினும் மேற்படிபரீட்சைக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்எனதெரியவருகின்றது

### கூட்டம்
(யாழ்ப்பாணம்)

சுகாதார தரிசிப்பாளர்கள், கிராமிய சுகாதார உதவியாளர்கள் பௌதிக சிகிச்சையாளர்கள் ஆகியோருக்கான ஒன்று கூடல் கூட்டம் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு இணுவில் அமெரிசகமிசன்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடகிழக்கு சுகாதாரதரிசிப்பாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (பா)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தமிழீழத்தில்
10
—
08
—
1975



தமிழீழ விடிவிற்காய்
21
—
08
—
1992

## வீரவேங்கை நேசன்
(கார்த்திகேசன் சிவநாதன்)

மானமிகு மாவீரர் உதித்த பூமி
மாண்பான வரணியெனும் புனிதபூமி
தானமொடு தவமியற்றும் மாபுகன்னில்
தானுதித்தான் சிவநாதன் வீரவேங்கை
அரசோச்சும் அரசினது அநீதி கண்டான்
அனல்கக்கும் எரிமலையாய் வெடித்ததுள்ளம்
பாசமுறு தந்தை தாய் தன்னை நீத்தான்
பந்தமுறு சோதரைப் பிரிந்தான் அன்றே
திரமான தமிழீழம் காணவேண்டித்
தீரமொடு போராடும் வேங்கை வீரர்
ஒப்பரிய கூட்டத்தில் இணைந்து கொண்டு
உரமுடனே போர்க்களத்தில் புகுந்தான் நாளும்
செப்பரிய சாதனைகள் புரிந்து மண்ணில்
தீரமொடு மாற்றாரை எதிர்க்கு நாளில்
மாதகலிலே இடம்பெற்ற பூமியதிர்ச்சியிலே
மாற்றாரை மனம்மறுக்க செய்தான் அன்று
பாதகராம் மாற்றாரின் படைக்கலத்தால்
டாரீ நீத்தான் வீரக்கல் இடமும் பெற்றான்
மலர்ந்துவரும் தமிழீழ மண்ணின் மீது
மங்காது அவன் புகழும் வாழ்க சாந்தி!
இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகளை செலுத்துகிறோம்.

வரணிவடக்கு
மாசேரி.

உன்பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,

[3178]

---

## விஜிதா அரைக்கும் ஆலை!

மிளகாய் மற்றும் அரிசி, குரக்கன், உழுந்து, பயறு போன்ற தானிய வகைகள் உடனுக்குஉடன் அரைத்துக்கொடுக்கப்படும்.

உரிமையாளர்
**இ. செல்லத்துரை**
24, விதானையார் வீதி,
[ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவகோயிலுக்கு அருகாமையில்]
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

[சி 5081]

---

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 20

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் எம்மைப் பிரிந்த-
★ சோமசுந்தரம் சுந்தரலிங்கம்
(மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**வசந்தன்** (கு. பரமேஸ்வரன்)

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையின் பின் வவுனியா செக்கட்டிப்புலவில் சடலங்களாக மீட்கப்பட்ட 2 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -
**கண்ணன்** [கனகசபாபதி பரமானந்தன்]

மட்டக்களப்பு, ஏறாவூர் முகாம் இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சவுக்கடி கிராமம் ஆறுமுகத்தான் குடியிருப்பு, தளவாய், மயிலம்பாவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள், சிறுவர்கள், இளம் பெண்கள், பெண்கள், இளைஞர் உட்பட 47 தமிழர்கள்.

அம்பாறையில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில சிறிலங்கா படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
**சூரியா** [யோகேஸ்வரி அம்பலவாணபிள்ளை - மூதூர், திருக்கோணமலை]

வெற்றிலைக்கேணி முகாமிலிருந்து ஆழிபவளைக்கு வந்த சிறிலங்காப் படையினரால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட குடும்பத் தலைவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5077)

---


# PHARMACY COURSE

**வகுப்புகள் ஆரம்பம் : 05 - 10 - 92**

விண்ணப்பங்கள் 30 - 09 - 92 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**விரிவுரையாளர் ;-**

**டாக்டர் திருமதி ப. சர்வேஸ்வரன்**

விபரங்களுக்கு :

**ஸ்ரீ சத்யா**
**பொலி மெடிக்கல் கிளினிக் & பார்மஸி**
இல. 6/1, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5078)


---


## ஆகுதியான எம் திலீபனின் கனவு நனவாக

நாம் ஒன்றிணைவோம்.
மக்கள் சக்தியை வெளிக்கொணர்வோம்.
இலட்சியத்தில் உறுதி கொள்வோம்.

**ஸ்ரீசத்யா**
**பொலி மெடிக்கல் கிளினிக் & பார்மஸி**
இல. 6/1, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (சி-5079)

சிந்தனைக்கு

அறத்தினை நெறிமுறையாக கடைப்பிடிக்காமல் இலட்சியமாக மட்டும் போற்றினால் நீ கபட வேடதாரி ஆவாய்.

-- ஆஸ்ட்டின் ஓ மேலி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20- 09 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அரசின் அசட்டை

"விடுதலைப் புலிகள் அரசாங்கம் விதித்துள்ள நான்கு அம்ச நிபந்தனைகளை ஏற்றுத் தீர்வுக்கான யோசனைகளை முன் வைத்தால் அவற்றை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்போம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை" இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரணில் விக்கிரம சிங்காவின் இக்கூற்று சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினையை யதார்த்த பூர்வமாக அணுக முற்படவில்லை என்பதையே காட்டுகிறது. அதாவது அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் வழி என்ற நிலையில் இருந்து மாறவில்லை என்பதே ஆகும். இராணுவ நடவடிக்கைகளினால் ஆயுதப் போராட்டத்தையோ அன்றி மக்களின் உணர்வுகளையோ அழித்துவிட முடியாது என்பதை அனுபவத்தின் மூலம் கூட புரிந்து கொள்ள அரசாங்கத்தால் முடியவில்லை.

விடுதலைப் புலிகள் நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுவார்த்தைகள் எதையும், எப்பொழுதும், எவருடனும் நடத்துவதற்குத் தயாராக இருக்கவில்லை பேச்சுவார்த்தைகள் சமரச முயற்சிகள் இரு தரப்பும் சமனான நிலையில் இருந்தே நடத்த வேண்டும் என புலிகள் தொடர்ந்து தெளிவாக வற்புறுத்தியும் வந்தனர். அவ்வாறு நடைபெறும் பேச்சுக்களே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவும் எனப் புலிகள் திடமாக நம்புகின்றனர்.

ஆனால் சிங்கள அரசாங்கம் எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசி வருவதினாலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவோ, அன்றி சமாதான முயற்சிகள் நோக்கி முன்னேறவோ முடியாத நிலை ஏற்பட்டு இருந்தது. இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்விற்கென அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றி அளிக்கக் கூடியவையாக நம்பிக்கை ஊட்டவில்லை அரசாங்கம் கூட்டிய சர்வகட்சி மாநாடோ அன்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ உருப்படியாகக் காரியம் ஆற்றும் என ஆரம்பம் முதலே எவரும் எதிர்பார்க்கவுமில்லை. இது குறித்து இப்பகுதியில் இதற்கு முன்னரும் நாம் பல தடவை சுட்டிக் காட்டியிருந்தோம்.

இவற்றை உணர்த்துமாற்போல் சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிவுற்றது பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ ஒருபக்கமும் நகர முடியாமல் திணறுகிறது, ஆனால், இவற்றிற்கான பெரும் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். இனப்

# சர்வவல்லமை பொருந்திய இராணுவத்தால் கூட

# மக்கள் சக்தியினை தோற்கடிக்க முடியாது

(நேற்றைய தொடர்ச்சி)

இதுமட்டுமா நாம்தற்கொலைப் படைகளைக்கூட உருவாக்கி உள்ளோம். இதனை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவமும் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல சமூகவிரோதக் கும்பல்களுக்கும் மிகவும் குறிப்பாகக் கூறுகின்றோம், பகிரங்கமாகக்கூறுகின்றோம், நாம் குட்டக் குட்டக் குனிபவர்களல்ல இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று எம்மிடம் ஆயுதங்கள் இல்லையென்றவுடன் மிகவும் பயங்கரமான அடாவடித்தனங்களில் அவர்கள் ஈடுபடுவதை மக்கள் அறிவர். எமது தோழர்களை அநியாயமாகக் கொலை செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். நாம் தனித்து நின்று இச்சமூக விரோதக் கும்பல்களை ஒரே நாளில் தடை செய்தோம் அன்றுஎம்முடன் எதிர்கொள்ள முடியாமல் ஒளித்தோடியவர்களெல்லாம் இந்திய இராணுவத்தின் உதவியுடன் இன்று வந்திருப்பதை எம்மால் சகிக்க முடியாமல் உள்ளது மிகவும் மனவேதனையுடன் இதை நான் கூறுகிறேன்.

இதேவேளை நான் தெளிவான விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் இந்து மகா சமுத்திரத்தைப் பொறுத்த வரையில் இந்தியா பிராந்திய வல்லரசு அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் இந்திய இராணுவத்திற்கு எதிராக இப்பிராந்தியத்தில் அமெரிக்கா கூட நிற்க முடியாது அது எங்களுக்குத் தெரியும் இந்திய இராணுவம்தான் சர்வ வல்லமை பொருந்திய இராணுவம் ஆனால் இந்திய இராணுவம் மக்கள் சக்திக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் டெல்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்கள் மக்கள் மறியல் போராட்டம் நடாத்தினார்கள்

சர்வ வல்லமைபொருந்திய இந்திய இராணுவம் வடபகுதி முகாம்களில் இருந்த வேளை முகாம்களில் இருந்து வெளியே ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை ஏனெனில் மக்கள் எழுச்சியுடன் போராடியதால் இந்திய இராணுவம் எதிர் நிற்க முடியவில்லை.

வியட்னாமைப் பொறுத்த வரையில் வியட்னாமிய மக்கள் அமெரிக்க இராணுவத்திற்கெதிராகவே போராட்டம் நடத்தினார்கள். அந்த அடிப்படையில் நாமும் எம்மைப் பொறுத்தவரையில் கூறுகிறோம் எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சிகொள்ள வேண்டும் இன்று கூட எங்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு ஆறாத



சோகத்தை ஏற்படுத்துகிறது அந்தநிலைமை தோற்றுவிக்கப் படவேண்டும் என்பதற்காக நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் போராடினால் எவரும் இப் போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும் ஒன்றைக் கூறுகிறேன் மக்கள் அனைவரும் முழுமையாகப் போராடத்தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்க முடியும் ஆனால் அந்தச் சூழ்நிலைகள் இல்லாதது எமக்கு வேதனையைத் தருகிறது மக்களும் இணையவேண்டும் என்பதைத்தான் நாம் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியிருந்தோம்.

இன்று இந்தப் போராட்டத்தில் கூட எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள் ஆனால் வெளியே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் அந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும் நிலைமை மாற்றி அமைக்கப்படுவதினூடாகத் தான் நாம் தமிழீழத்தை அமைக்கமுடியும் அன்று கூட நாங்கள் கூறியிருந்தோம் இந்திய இராணுவத்திடம் நாம் ஏன் ஆயுதங்களைக்கையளித்தோம் என்று மக்கள் முழு நாட்களும் எம்முடன் நின்றிருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது காலப்போக்கில் முழுமக்களையும் நாம்அணிதிரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு முழுமக்களையும்அணிதிரட்டித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்போம் என்ற நம்பிக்கையும் உண்டு.

இந்திய அரசும், இந்திய இராணுவமும் இலங்கை அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் முழுமையான மக்கள் சக்தி ஒன்று திரண்டால் ஒன்றுமே செய்ய முடியாது அடிப்படை உரிமையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது ஏனெனில் நாமே எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும் எமது போராட்டம் தொடரத்தான் போகிறது. இது ஒரு அடையாள மறியல் போராட்டம். இதைக் கூட நாம் பெருமளவில் செய்யத் திட்டமிடவில்லை. இப் போராட்டத்திற்கு எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதாகவும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தார்கள். இவை மட்டுமல்ல இதைப் போன்று எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. நாம் ஒப்பந்தத்தை நிராகரிக்கிறோம் அதேவேளை தமிழ்ப்

**தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் 7.9.1987 அன்று கோட்டை முகாம் முன்னால் நிகழ்த்திய புகழ் பெற்ற பேச்சின் இரண்டாம்பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. சிங்கள இராணுவமும் இன்னும் இனஅழிப்பைத்தான் செய்து கொண்டிருக்கிறது எமது அடிப்படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக நசுக்கப்பட்டு நாம் நிரந்தர அடிமையாவதை விரும்பவில்லை.

இக்காரணங்களுக்காகவே நாம் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இவற்றிற்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இப்போராட்டம் நிச்சயம் தொடரும். நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன். காலப்போக்கில் எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்திய இராணுவம் இங்கிருந்து நகர முடியாத நிலை ஏற்படலாம் அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

(முற்றும்)

## அகிம்சை எனும் சுடரால் சுட்டெரித்தான் பாரதத்தை

நிற்க நடக்க நம்குலகில் நிலமுண்டோ
கற்கக் கலை பயில கடுகளவு வழியுமுண்டோ - ஏக்கம்
இற்றைக்கு இருபத்து ஆண்டுகள் முன் இருந்த நிலை
சொற்கள் வரவில்லை பதிலுரைக்கச் சோர்வுற்றோம்.

பெற்றோம் பிரபாகரனைப் பிறந்தது புலிகள்படை
பெற்றோரை பிரிந்தோம் புதிய பிறப்பெடுத்தோம் - பகை
வற்றி அழிந்துபட வாகை பல சூடி நின்றோம்
நற்றமிழ்த்தாய் தலைநிமிர்ந்தாள் நாமொன்றுசேர்ந்தோம்

உற்று நோக்கியது உலகமெமை உறுத்தியது இந்தியாவை
உற்றதுணை தாமெனவே உரக்கக்குரல் கொடுத்து -
வஞ்சனையால்
பற்றி நமை அழித்துப் பாரதத்தின் நலன்காக்க
வற்புறுத்தி ஒப்பந்தம் வரைந்திங்கு கால்பதித்தார்.

பட்டினியாய்ப் பன்னிரு நாள் படுத்திருந்தே திலீபன்
சுட்டெரித்தான் அகிம்சை எனும் சுடரால் பாரதத்தை
வெட்கித் தலைகுனிய வைத்தானே காந்திதனை- தமிழர்
நெஞ்சப்
பெட்டகத்துள் வைத்தவனை பெருமையுடன் போற்றிடு
வோம்.

- செ.தமிழேந்தி

# கடத்தல் தடுப்பிற்கு சொத்து பறிமுதல்

## திரைப்பட அருங்காட்சியகம் சென்னையில் அமையும்

சுகக்ளே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவும் எனப் புலிகள் திடமாக நம்புகின்றனர்.

ஆனால் சிங்கள அரசாங்கம் எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசி வருவதினாலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவோ, அன்றி சமாதான முயற்சிகள் நோக்கி முன்னேறவோ முடியாத நிலை ஏற்பட்டு இருந்தது. இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்விற்கென அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றி அளிக்கக் கூடியவையாக நம்பிக்கை ஊட்டவில்லை. அரசாங்கம் கூட்டிய சர்வகட்சி மநாடோ அன்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ உருப்படியாகக் காரியம் ஆற்றும் என ஆரம்பம் முதலே எவரும் எதிர்பார்க்கவுமில்லை. இது குறித்து இப்பகுதியில் இதற்கு முன்னரும் நாம் பல தடவை சுட்டிக் காட்டியிருந்தோம்.

இவற்றை உணர்த்துமாற்போல் சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிவுற்றது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ ஒருபக்கமும் நகர முடியாமல் திணறுகிறது, ஆனால், இவற்றிற்கான பெரும் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்விற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் பெரும்பான்மை அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி - அரசாங்கம் - தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. அத்தோடு, தமிழர் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் மத்தியிலும் ஏன் கட்சியின் கொள்கையில் கூடத் தெளிவான நிலைப்பாடு காணப்படுவதாக இல்லை. மாறாக பலத்த முரண்பாடே உள்ளது,

இதேபோன்றே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் பாரிய முரண்பாடுகள் உள்ளன. உறுப்பினர்கள் மத்தியில் பலமான கருத்துவேறுபாடுகள் இருப்பதோடு, தீவிர போக்குக்கொண்ட ஹெலஉறுமய என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது இத்தீவிர பௌத்த பேரினவாத அமைப்பானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம், ஒரு தீர்வுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ளதோடு. இனப்பிரச்சினையில் முக்கிய அம்சமாகவுள்ள வடக்கு-கிழக்கு இணைப்பிற்குக் கடும் ஆட்சேபமும் தெரிவித்துவருகின்றது மேலும், இத் தீர்வுத்திட்டம் தமிழ் தேசிய இனத்திற்கு பெரும் பிரச்சினைகள் உள்ளது என்பதையே மறுக்கின்றது.

சிங்கள பேரினவாத கட்சிகளினாலும்: தனிப்பட்டவர்களின் நிலைப்பாடுகள் மேற் கூறப்பட்டவாறு இருப்பது ஒரு புறம் இருக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றும் தமிழ்க் குழுக்களுக்கும் முஸ்லிம் குழுக்களுக்கும் இடையில் எழுந்துள்ள பிணக்கும் சச்சரவுகளும், பெயரளவில் தானும் கூடிக் கலைந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகளை போட்டுள்ளன.

இவ்வாறு சர்வகட்சி மாநாட்டின் வரிசையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் செயற்பாடுகளை இழந்து மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது அதாவது அதன் இறுதி மூச்சு ஊசலாடிக் கொண்டிருக்கின்றது என்பதைச் சகலரும் ஏற்றுக் கொள்வர்.

இந்நிலையில் அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா புலிகள் ஆலோசனை சமர்பித்தால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்பிப்போம் என்பது அரசாங்கம் இனப்பிரச்சினை விவகாரத்தில் எவ்வளவு அசட்டையாகவும் அக்கறையின்றியும் இருக்கின்றது என்பதையே காட்டுகின்றது ஆனால் எதிர்காலத்தில் அரசு இவ் அசட்டைக்கும் அக்கறையீனத்திற்கும் ஆனவிலையை அரசு செலுத்த வேண்டிவரும். அப்பொழுது அரசு கடந்த காலத்தில் தான் விட்ட தவறுக்காக வருந்த வேண்டியும் வரும் ஆனால், அது "கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்" செய்வது போன்றதாகவே இருக்கும்.

---

அமெரிக்கா கூட நிற்க முடியாது அது எங்களுக்குத் தெரியும் இந்திய இராணுவம் தான் சர்வ வல்லமை பொருந்திய இராணுவம் ஆனால் இந்திய இராணுவம் மககள் சக்திக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் டெல்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்கள் மக்கள் மறியல் போராட்டம் நடாத்தினார்கள்

சர்வ வல்லமைபொருந்திய இந்திய இராணுவம் வட பகுதி முகாம்களில் இருந்த நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் போராடினால் எவரும் இப்போராட்டத்திற்கு மதி பளித்தேயாக வேண்டும் ஒன்றைக் கூறுகிறேன் மக்கள் அனைவரும் முழுமையாகப் போராடத்தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்க முடியும் ஆனால் அந்தச் சூழ்நிலைகள் இல்லாதது எமக்கு வேதனையைத் தருகிறது மக்களும் இணையவேண்டும் என்பதைத்தான் நாம் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியிருந்தோம்.

இது ஒரு அடையாள மறியல் போராட்டம். இதைக் கூட நாம் பெருமளவில் செய்யத் திட்டமிடவில்லை. இப்போராட்டத்திற்கு எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதாகவும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாகவும் அந்த குறிப்பிட்டிருந்தார்கள். இவை மட்டுமல்ல இதைப் போன்று எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்

---

உற்று நோக்கியது உலகமெமை உறுத்தியது இந்தியாவை
உற்றதுணை தாமெனவே உரக்கக்குரல் கொடுத்து -
வஞ்சனையால்
பற்றி நமை அழித்துப் பாரதத்தின் நலன்காக்க
வற்புறுத்தி ஒப்பந்தம் வரைந்திங்கு கால்பதித்தார்.
பட்டினியாய்ப் பன்னிரு நாள் படுத்திருந்தே திலீபன்
சுட்டெரித்தான் அகிம்சை எனும் சுடரால் பாரதத்தை
வெட்கித் தலைகுனிய வைத்தானே காந்திதனை- தமிழர்
நெஞ்சப்
பெட்டகத்துள் வைத்தவனை பெருமையுடன் போற்றிடு
வோம்.

— செ.தமிழேந்தி

---

# கடத்தல் தடுப்பிற்கு சொத்து பறிமுதல் அசுத்தமாக்கினால் சிரமதானம்

## சிங்கப்பூர் பாராளுமன்றம் தீர்மானம்

போதைவஸ்து கடத்தல் நடவடிக்கையில ஈடுபடும் கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தல் தெருவில குப்பைகளை கொட்டுபவர்களை கட்டாய சிரமதானத்துக்கு உள்ளாக்குதல் ஆகியவற்றுக்கான மசோதாக்களை சிங்கப்பூர் பாராளுமன்றம் கடந்த திங்களன்று நிறைவேற்றியுள்ளது.

அம்மசோதாவால் போதைப் பொருள் கடத்தல் மூலம் பெறப்படும் பணத்தைப் பயன்படுத்தி வேறு தொழில்களைச் செய்வது குற்றம் எனவும் அம்முதலீடுகள் பறிமுதல் செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுடன் நகரை அசுத்தப்படுத்துபவர்கள் குறிப்பிட்ட இடங்களில் 3 மணித்தியாலங்களுக்கு கட்டாய சிரமதானம் செய்யவேண்டியிருக்கும் என்றும் அப்படி செய்ய மறுப்பவர்கள் 5000 சிங்கப்பூர் டொலர் அபராதம் செலுத்த வேண்டும் அல்லது இரண்டு மாத சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருக்குமென சூழல் அமைச்சர் அஹ்மதமதார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தமிழக அமைச்சர்

# சுப்புலெட்சுமி மீது இரகசிய விசாரணை

பத்மநாபா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் உட்பட அனைத்து சந்தேக நபர்கள் மீதும் இரகசிய விசாரணை நடத்தப்பட்டுள்ளது

சென்னை விசேட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்ட போது வழக்கறிஞர்கள் தவிர வேறெவரும் அனுமதிக்கப்படவில்லை இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சுப்புலெட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் ஜெகதீசன், முன்னாள் உள்துறை செயலாளர் ஆர் நாகராஜன், வை ரவிச்சந்திரன், வழக்கறிஞர் ராஜசேகரன், மருதநாயகம் ஆகியோர் பிணையில் விடப்பட்டுள்ளனர். எஞ்சிய கைதிகள் அனைவரும் சென்னை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இரகசிய விசாரணையின் போது குற்றப் பத்திரிகையின் ஒரு பகுதி சந்தேக நபர்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜார்க்கன்ட் வளர்ச்சி சபை மசோதா

# மத்தியின் திருத்தங்களோடு பேரவையில் தாக்கலாகும்

— பீகார் அரசு அறிவிப்பு

(டில்லி)

ஜார்க்கன்ட் தொகுதி வளர்ச்சி பற்றிய மசோதாவிற்கு மத்திய அரசு தெரிவித்துள்ள திருத்தங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்காக அதனை சட்டப் பேரவை முன்பு வைக்கப் போவதாகப் பீகார் அரசுகூறியுள்ளது.

எனினும் வளர்ச்சி சபையின் உறுப்பினர்களில் மூன்றிலிரு பங்கு உறுப்பினர்கள் சோடா நாக்பூர், மற்றும் சாந்தல்பர்கூர் பகுதிகளிலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனவும், மூன்றிலொரு பங்கு உறுப்பினர்கள் மாநில அரசால் நியமிக்க வேண்டுமெனவும், மத்திய அரசு கூறிய யோசனையை முதலமைச்சர் லல்லு பிரசாத்யாதவ் ஏற்றுக் கொண்டிருப்பதாக பீகார்அரசின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# முழு அளவில் ராஜீகஉறவு; இந்தியா - புரூணை முடிவு

(டில்லி)

இந்தியாவும், புரூணையும், முழுஅளவிலான ராஜதந்திரக் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், புரூணை மன்னர் சுல்தான் ஹாதிஹசன் அல் போஜியாவும் சந்தித்துப் பேசியதையடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மலேசியாவிலுள்ள ஹைக்கமிஷன் மூலம் புரூணையுடன் தொடர்பு கொண்டிருக்கும் இந்தியா புரூணையிலேயே தூதுவரகம் ஒன்றைத் திறக்கவுள்ளது புரூணையும் புதுடில்லியிலுள்ள அலுவலகத்தை தூதுவரக அந்தஸ்திற்கு உயர்த்த உள்ளது.

# திரைப்பட அருங்காட்சியகம் சென்னையில் அமையும்

தென்னகத் திரைப்படங்களின் அருங்காட்சியகம் ஒன்று சென்னையில் பத்துக்கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. திரைப்படங்களின் வரலாறு மற்றும் தொழில் நுட்ப மேம்பாடு உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இந்த அருங்காட்சியகம் பொழுதுபோக்கு, ஆராய்ச்சி ஆகிய இரு நோக்கங்களுக்கும் பயன்படும் என்று தென்னிந்திய திரைப்பட சங்கத் தலைவர் பக்தவத்சலம் கூறியுள்ளார்,

# தமிழ்நாட்டுக் கரையோர பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளின் பாதுகாப்புமேலும் பலப்படுத்தப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. விசேட பொலிஸ் படையினரும், கடலோரப் பாதுகாப்பு படையினரும் விடுதலைப் புலிகள் ஊடுருவல்களை மேற்கொள்ளலாம் என்று வந்த செய்திகளை அடுத்துப் பாதுகாப்பை பலப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சுப்பமார்க்கட் சிப்பந்தியாக பிரிட்டன் பிரதமரின் மகன்

(லண்டன்)

பிரிட்டன் பிரதமர் ஜோன் மேஜரின் மகன் பிரபல சுப்பர் மார்க்கட் ஒன்றில் பொருள்களை அடுக்கும் வேலை ஒன்றைப் பெற்றுக் கொண்டுள்ளார் பதினேழு வயதான ஜேம்ஸ் மேஜர் லண்டன், கேமபிரிடஜ் ஷயரில் உள்ள கல்லூரி ஒன்றில் உயர்தர வகுப்பில் படித்து வருகிறார். பள்ளியின் கோடை விடுமுறையை பயனுள்ள வகையில் கழிப்பதற்காக இந்த வேலையை இவர் பெற்றுக்கொண்டுள்ளார் மணித்தியாலம் ஒன்றுக்கு மூன்று பவுண்கள் என்ற ஊதிய அடிப்படையில் அவர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில்

# பில்கிளின்டன் தொடர்ந்தும் முன்னணியில் திகழ்கிறார்

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரும் நவம்பர் 3இல் நடைபெற இருக்கின்றது. வேட்பாளர்கள் ஜனாதிபதி புஷ், பில் கிளின்டன ஆகிய இவ் இருவரிலும் யார் வெற்றிபெறுவார்கள் என ஏ. பி சி நியூஸ் வாஷிங்டன் போஸ்ட் ஆகியன ஆய்வு செய்ததில் ஜனநாயக கட்சி வேட்பாளர் பில் கிளின்டனுக்கு 54வீத ஆதரவும் ஜனாதிபதி புஷ்ஷுக்கு 39 வீத ஆதரவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

தொகுதிக்கு தொகுதி விகிதாசாரத்தில் மாற்றம் காணப்பட்ட போதிலும் பில் கிளின்டனே முன்னணியில் திகழ்வதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# இந்தியா - பிரிட்டன் நாடு கடத்தல் ஒப்பந்தம்

(டில்லி)

இந்தியாவும் பிரிட்டனும் நாடு கடத்தல் ஒப்பந்தமொன்றை அடுத்த வாரம் செய்து கொள்ளவுள்ளன. பிரிட்டனுடன் நாடு கடத்தல் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு இந்திய அமைச்சரவை கடந்த புதன்கிழமை அங்கீகாரமளித்தது.

சட்ட விரோதமாகச் சேர்க்கப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றும் இரு நாடுகளுக்குமிடையே செய்துகொள்ளப்படவிருக்கிறது இதற்கான அங்கீகாரத்தையும் இந்திய அமைச்சரவை அளித்திருக்கிறது.

இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் அடுத்த வாரம் பிரிட்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார். அவ்வேளை இவ்விரு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படும் என இந்திய அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ் இரு உடன் படிக்கைகளும் தீவிரவாதத்தையும் இந்திய சீக்கிய தீவிரவாதிகளுக்கு பிரிட்டனிலிருந்து கிடைக்கும் நிதியுதவியை தடுக்கவும் உதவும் என கூறப்படுகிறது.

# வரட்சியால் யானைகள் கிராமங்களுக்குள் நுழைவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் வரட்சியின் காரணமாக காட்டு யானைகள் ஊருக்குள் படையெடுத்து வருவதாக தெரிய வருகிறது. தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள அடர்ந்த காடுகளிலிருந்து காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி நீருக்காக நகர்வதாகக் கூறப்படுகிறது.

---

**நிவாரண**

யது ஏன்? என்றும் அவர்கள் கேள்விக்கணை தொடுத்தனர் இந்த விவகாரத்தில் அமைச்சர் ராஜினாமா செய்வாரா எனவும் கேள்வி எழுப்பினர்.

புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநல ராஜாங்க அமைச்சின் செயலாளர் ராஜா அமரசேகர இக்கேள்விகளுக்கு பதிலலிக்க முடியாது திணறினார்.

மந்திரிசபை கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று முன்தினம் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

அகதிகளுக்கான நிவாரணத்தைதொடரநாம்உரியகாலத்தில் நடவடிக்கை எடுத்தோம் என இராஜாங்க அமைச்சின் செயலாளர் அமரசேகர கூறிய போது எப்போது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

உரிய திகதியை தன்னால் இப்பொழுது சொல்ல முடியாதிருக்கிறது என இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

---

**தியாகி திலீபன்**

ஆதரவில் அல்வாய் மேற்கு மக்களால் பொதுக்கிணறு வீதி திருத்தியமைக்கப்படவுள்ளது.

கரவெட்டி வட்டப்பிரிவில் செங்கதிர்அறிவாலயஆதரவில் கரவெட்டி மேற்கு மக்களால் செங்கதிர் அறிவாலயம் சூரிய கலாபாலர் பாடசாலை சிறு முன்வீதி என்பன திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளன

பளைவட்டப்பிரிவில் பொது மக்களால் பளைப்பிரதேச பொதுக்கிணறுகள் துப்புரவு செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் மீசாலை பன்றிக்கேணி வீதி, கல்வயல் நாகதம்பிரான் கோவில் வீதி என்பன திருத்தப்படவுள்ளன.

---

**தியாக**

ம்பி வளிந்தன. இந்த உண்ணாவிரதப் பந்தல்களில் தியாகி திலீபனின் நினைவாக கவியரங்கம், நினைவுரைகள் ஆகியன நடைபெற்றன. அத்துடன் தியாகி திலீபனின் புகழ் பெற்ற ''கோட்டை வாயில் பேச்சு'' ஒலிபரப்பப்பட்டது இப்பேச்சைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட மக்கள் கண்ணீர் மல்கிய நிலையில் காணப்பட்டனர். மேலும் திலீபனின் நினைவாக வெளியீடப்பட்ட வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது.

இவற்றைவிட தியாகி திலீபனின் நினைவாக நடைபெற்று வரும் ஏனைய அஞ்சலி நிகழ்ச்சிகள் வழமை போல் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றது. திலீ

---

# நீதிமன்றம் உத்தரவிட்டும் விடுதலை செய்யவில்லை

(கொழும்பு)

மேன்முறையீட்டு மன்றத்தால் விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்ட பின்னரும் விடுதலை செய்யப்படாமல் 18 பேர் சிறிலங்கா தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக காணாமல் போனோர் பற்றிய விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர் ஜே எம். சொய்சா தெரிவித்துள்ளார்.

அத்துடன் 214 பேர் எதுவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் 28 பேர் ஆரம்ப விசாரணைகளின் பின் விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்ட பின்பும் விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிறிலங்காவிலுள்ள ஆறு இராணுவத்தடுப்பு முகாம்களிலும் ஆறு புனர்வாழ்வு முகாம்களிலும் ஏனைய இராணுவ பொலிஸ் முகாம்களிலும் மொத்தம் 7,356 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் 5 627 பேர் சிங்களவர், 1 646 பேர் தமிழர், 83 பேர் முஸ்லிம்கள் என தெரிவிக்கப்படுகிறது.

---

**புலிகளுக்கு**

யோரக் காவலைப் பலப்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அத்தோடு மாநிலத்தில் தடைகளையும் மீறி தலை தூக்கிவரும் புலிகளின் ஆதரவு சக்திகளை எவ்வாறு ஒடுக்குவது என்பது குறித்தும் தமிழக அரசு தீவ்ரமாகப் பரிசீலித்து வருகின்றது. இதே வேளை தமிழக அரசிற்கு தேவையான ரிசேவ் பொலிஸ் படை மற்றும் இராணுவ பிரிவுகளை அனுப்பி வைக்க மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

**நிலையெடுக்க**

றையும் அவதானிக்க முடிந்தது.

நேற்றுக்காலை இப்பகுதிகளுக்குச் சென்ற நமது நிருபர் மேற்படி பகுதி நிலைமைகளை நேரடியாக அவதானித்தார். பண்டத்தரிப்பு சந்தியில் இருந்து சில்லாலைக்குச் செல்லும் வீதியிலும் மேற்படி சந்தியைச் சூழவுள்ள பகுதிகளிலும் கைவிடப்பட்ட தற்காலிக காவல் அரண்கள் பல காணப்பட்டன. சிலகாவல் அரண்கள் அரைகுறையாக அமைக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்தன.

இராணுவத்தினரின் பீரங்கி மற்றும் எறிகணைத்தாக்குதல்களால் பல கட்டடங்கள் சேதமடைந்திருந்தன. வீடுகளிலும், பாடசாலையிலும் இருந்த சில தளபாடங்கள் வீதியோரங்களில் காணப்பட்டன. அரைகுறையாக அமைக்கப்பட்ட காவல் அரண்களும், கைவிடப்பட்டு திட்ட ஒழுங்கின்றிக் கிடந்த தற்காலிக காவல் அரண்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்த படையினர் பாவித்த சில பொருள்களும் படையினர் அவசர அவசரமாக மேற்படி பகுதியில் இருந்து வந்த வேகத்திலேயே திரும்பியிருக்கின்றனர் என்பதை உணர்த்திக்கொண்டிருந்தன.

படையினர் பின்வாங்கிச் சென்றதையடுத்து மேற்படி பகுதிகளுக்கு பொதுமக்கள் சென்று திரும்புவதையும் அவதானிக்கமுடிந்தது அத்துடன் வடலியடைப்பு, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு மக்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். (க)

---

# ஓய்வூதியம்

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாத கொடுப்பனவு தற்

---

## ஆறாம் நாள்

நஞ்சுமனம் கொண்ட வஞ்சகரை எண்ண
நெஞ்சில் அலை பொங்கி வழியுதம்மா—தினம்
கொஞ்சு மொழி பேசிச் சிரித்த பிள்ளை
பிஞ்சுடல் பஞ்செனவே கிடந்ததம்மா!

ஆறாம் நாள் இன்று அனல் மழை பெய்ததம்மா
ஆறாக மக்கள் படை நல்லூரில் நிறைந்ததம்மா!
போராடும் புலிகளெல்லாம் அணியணியாய் வந்து
ஆறாத்துயரில் அமிழ்ந்த நாள் இதுவம்மா!

அம்மா தமிழே! ..எம்மைப் பெற்ற தாயவளே!
—உன் பிள்ளை
வெம்மையது தாங்காமல் துடிப்பதை நீ அறியாயோ?
பச்சைக்குருத்தில் தீ பற்றுவதைப் பார்த்தாயோ?
''குச்சுடல்'' நீரின்றிக் குமுறுவதைக் கண்டாயோ?

கண்டுமுன் மௌனம் கலையாமல் இருப்பதென்ன
பண்டை மண் பெற்றெடுத்த பாசத்தமிழ்த் தாயே
அண்டா வெளியெங்கும் பறந்து வரும் உன் பிள்ளை
தண்ணீற்ற தாவரம் போல் தவிப்பதை நீ அறியாயோ?

எல்லாளமன்னன் எழிலாக அரசு செய்த
நல்ல மண் மீது நடந்து வந்த நற்றமிழே!
வல்லூறின் வாயருகே செல்லவொரு குஞ்சு
வழிதேடும் இந்த நல்லூரில் நீ வந்து காப்பாயோ?

காப்பாயோ? இல்லை அழிப்பாயோ? நாமறியோம்
— ஆனால்
பூப்போல பிள்ளை புரள்வதைப் பார்த்தும் நீ
காப்பதற்கு வரவில்லை என்றால் ..கன்னித் தமிழே!
தீப்போல் மக்கள் திரண்டெழுவர் திண்ணமிது!

-கவிஞர் மு. வே.யோ. வாஞ்சிநாதன்-

---

## சிறுவர் நலன் பற்றிய சார்க்மாநாடு

# அமைச்சர்கள் குளிரூட்டிய அறையில் சிறுவர் வெய்யிலில் அணிவகுப்பு

சார்க் மாநாடு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்முதல்நாள் ஆரம்பித்துநடந்து கொண்டிருந்த போதுவெளியில் அணிவகுத்துச் சென்ற பள்ளிச் சிறார்கள் வெயில் காரணமாக மயக்கம் போட்டு விழுந்தார்களா என்று பத்திரிகையாளர் சார்க் பிரதிநிதிகளிடம் இக்கட்டான கேள்வி ஒன்றைக் கேட்டுப் பிரதிநிதிகளைத் திணறடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகள் நலன் பற்றிய சார்க் மாநாடு முதல்முதலாக ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது அந்த மாநாட்டிற்குப் பின் குழந்தைகள் நிலைமையில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு செய்ய கொழும்பில் இந்தக் கூட்டம் நடந்தது இந்த மூன்றுநாள் மாநாடு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் நடந்த அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காகப் பாடசாலைகளுக்கு ஒரு நாள் வீடுமுறையும் வழங்கப்பட்டது குழந்தைகள் நலன் குறித்து சார்க் வெளியுறவு அமைச்சர்கள் குளிரூட்டிய அரங்கில் ஆலோசனை கலந்து கொண்டிருந்தபோது, வெளியில் திங் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இம்முறை மாநாட்டின் தொடக்கவிழா ஐந்து மணிநேரம் நடைபெற்றது. சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹெரல்ட் ஹேரத்தும். ஐ. நா. மன்றத்தின் குழந்தைகள் நலன் காக்கும் அமைப்பான யுனிசெவ் இயக்குனரும் உரை நிகழ்த்தினார்கள் ஜனாதிபதி பிரேமதாசா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

இரண்டாவதாகநடந்தசெய்தியாளர் மாநாடும் குழப்பமாகவே இருந்தது.

உலகில் அமைதியான முறையில் மாற்றங்கள் நிகழ்வதாக நம்பவைக்க முயல்வது யுனிசெவ் ஆபிரிக்காவைப் பாருங்கள் என்றார் யுனிசெவ் இயக்குநர்.

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? உகண்டாவில் ஒரே தடவை சொமாலியாவில் பிக்கிலும் இதேநிலைமை ஆபிரிக்காவில் எந்தக்காலமும் கொந்தளிப்பு ஏற்படக் கூடிய நிலைமை சோமாலியாவில் லட்சக் கணக்கில் பசிபட்டினியால் மடிகின்றனர் உலகில் இப்படியான நிலைகள் இருக்கும் போது அமைதியான மாற்றங்கள் நடை பெறுவதாகக் கூறுகிறீர்களே?'' என்று ஒரு பத்திரிகையாளர் கேள்விக்கணை தொடுத்தபோது, ''இதெல்லாம் வழக்கமாக நடைபெறுவதில்லை. அசாதாரணமான நிலைமைகள்'' என்றார் யுனிசெவ் இயக்குனர்'.

---

**வெளிவந்து விட்டது**

**தியாகப் பயணத்தில் திலீபனுடன் 12 நாட்கள்**

நல்லூரில் தியாகி திலீபன் நடத்திய யாகம் பற்றிய குறிப்பேடு

எழுதியவர்:

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் அரவணைப்பில்
25-05-1971

மண்ணின் மடியில்
02-09-1991

சமூகநல ராஜாங்க அமைச்சின் செயலாளர் ராஜா அமரசேகர இக்கேள்விகளுக்கு பதிலலிக்க முடியாது திணறினார்.

மந்திரிசபை கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று முன்தினம் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கேள்விக் கணைகள்

வடிக்கை எடுத்தீர்கள் என பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

உரிய திகதியை தன்னால் இப்பொழுது சொல்ல முடியாதிருக்கிறது என இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.


## வெளிவந்து விட்டது

# தியாகப் பயணத்தில் திலீபனுடன் 12 நாட்கள்

நல்லூரில் தியாகி திலீபன் நடத்திய யாகம் பற்றிய குறிப்பேடு

எழுதியவர்:
கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

புத்தகசாலைகள் எங்கும் கிடைக்கும்

(சி/5084)



## தேவை

எழுத்துக் கோர்ப்பதிலும், பக்கம் கட்டுவதிலும் அனுபவமுடையவர்களும், புத்தகம் கட்டுவதிலும், கட்டரிலும் அனுபவமுடையவர்களும் (ஆண்கள்) எமக்கு தேவைப்படுகிறார்கள்.

குறைந்தது இருவருட அனுபவமுடையவர்கள் (23-9-92) புதன்கிழமை நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மாறன் பதிப்பகம்,**
664, மருத்துவமனைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(சி/5083)


தப்படவுள்ளன.

## தியாக

ம்பி வளிந்தன. இந்த உண்ணாவிரதப் பந்தல்களில் தியாகி திலீபனின் நினைவாக கவியரங்கம், நினைவுரைகள் ஆகியன நடைபெற்றன. அத்துடன் தியாகி திலீபனின் புகழ் பெற்ற ''கோட்டை வாயில் பேச்சு'' ஒலிபரப்பப்பட்டது இப்பேச்சைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட மக்கள் கண்ணீர் மல்கிய நிலையில் காணப்பட்டனர். மேலும் திலீபனின் நினைவாக வெளியீடப்பட்ட வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது.

இவற்றைவிட தியாகி திலீபனின் நினைவாக நடைபெற்று வரும் ஏனைய அஞ்சலி நிகழ்ச்சிகள் வழமை போல் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றது. திலீபனின் நினைவாக நடைபெற்றுவரும் சிரமதானப் பணிகளும் நடைபெற்றன. (க)

## ஷெல்

பெற்ற இத்தாக்குதலின்போது பல எறிகணைகள் பண்டத்தரிப்பு வயல்வெளிகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன எனினும் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. (க),(பா)

## யுத்தத்தினால்

என்றும், போதிய சுகாதார வசதியின்மை, சுத்தமான குடிநீர் இன்மை ஆகியவற்றால் தேவையின்றி மரணமடைகிறார்கள் என்றும் தெரிய வருகிறது. அதாவது நாளாந்தம் பிறக்கும் மூன்றரைக்கோடி சிறுவர்களில் ஐம்பது லட்சம் பேர் ஐந்து வயதிற்கு முன்பே இறந்து விடுகிறார்கள் என்பது புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகிறது.

யினர் பாவித்த சில பொருள்களும் படையினர் அவசர அவசரமாக மேற்படி பகுதியில் இருந்து வந்த வேகத்திலேயே திரும்பியிருக்கின்றனர் என்பதை உணர்த்திக்கொண்டிருந்தன.

படையினர் பின்வாங்கிச் சென்றதையடுத்து மேற்படி பகுதிகளுக்கு பொதுமக்கள் சென்று திரும்புவதையும் அவதானிக்கமுடிந்தது அத்துடன் வடலியடைப்பு, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு மக்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். (க)

## ஒய்வூதியம்

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்டெம்பர் மாத கொடுப்பனவு தற்போது யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் திரு சூ வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (22)

## றீகன் நகரில் உண்ணாவிரதம்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி றீகன் நகர் கப்டன் ஜிம்கலி சனசமூக நிலையத்தினரால் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த உண்ணாவிரதத்தை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருள் அவர்கள் ஈகச் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைப்பார். இன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரத நிகழ்வில் தியாகி திலீபனின் உண்ணாவிரத நிகழ்ச்சி பற்றிய தொலைக்காட்சிப் படம் காண்பிக்கப்படும்.

## அகதிகளுக்கு உணவுப் பொருள்கள்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக உள்ள 102 குடும்பங்களைச் சேர்ந்த 484 பேருக்கு கூட்டுச்சமையல் செய்து உண்பதற்கு உலர் உணவுப் பொருள்களையும் மரக்கறிகளையும் வழங்கி வருகின்றது என தெரியவருகிறது

இதன்படி மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் தங்கியுள்ள 59 குடும்பங்களுக்கும்' கூழாவடி முகாமிலுள்ளவர்களுக்கும், கட்டுடை முகாமிலுள்ளவர்களுக்கும் அரிசி, மரக்கறி, பருப்பு போன்ற உணவுப் பொருள்களை வழங்கிவருகின்றனர்

இவற்றைக் கொண்டு இவர்கள் கூட்டுச்சமையல் செய்து சாப்பிடுவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளனர். (42)

நிதிகளிடம் இக்கட்டான கேள்வி ஒன்றைக் கேட்டுப் பிரதிநிதிகளைத் திணறடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகள் நலன் பற்றிய சார்க் மாநாடு முதல்முதலாக ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது அந்த மாநாட்டிற்குப் பின் குழந்தைகள் நிலைமையில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு செய்ய கொழும்பில் இந்தக் கூட்டம் நடந்தது இந்த மூன்றுநாள் மாநாடு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் நடந்த அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காகப் பாடசாலைகளுக்கு ஒரு நாள் வீடுமுறையும் வழங்கப்பட்டது குழந்தைகள் நலன் குறித்து சார்க் வெளியுறவு அமைச்சர்கள் குளிரூட்டிய அரங்கில் ஆலோசனை கலந்து கொண்டிருந்தபோது, வெளியில் கொழுத்தும் வெய்யிலில் பள்ளிச் சிறார்கள் அணிநடையில் சென்றபோதே செய்தியாளர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்

மேலும் தொடக்க நாளன்று நடத்தப்படும் உரைகளும் வெளியிடப்படும் அறிக்கைகளும் இனிமேல் சுருக்கமாக இருக்கவேண்டும் என கடைசியாக நடந்த சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்

## அரசின்

பான சர்வதேச கமிஷனைச் சேர்ந்த லூயிஸ் குட்னர், டென்யார் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் வெட்.பி நந்தா ஆகியோர் தாக்கல் செய்துள்ள இப்புகாரில் சிறிலங்கா அரசுக்கு எதிராகப் பொருத்தமான தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் சிறிலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த கனேடியத் தூதுக் குழுவொன்று பல்வேறு மூலங்களிலிருந்தும் தமிழர்கள் காணாமற் போவது மற்றும் கொல்லப்படுவது என்பவற்றில் பாதுகாப்புப் படையின் பங்கு பற்றிய ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்று வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கையின் அடிப்படையிலும், அம்னெஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும் மேற்படி புகார் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பண்டத்தரிப்பில்

வருவதாகவும், இங்கு விடுதலைப்புலிகளின்சுமார்20 முகாம்கள் கைப்பற்றப்பட்டதாகவும் வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா தலைமையில் மேற்படி இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

உரை நிகழ்த்தினார்கள் ஜனாதிபதி பிரேமதாசா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

இரண்டாவதாக நடந்த செய்தியாளர் மாநாடும் குழப்பமாகவே இருந்தது.

உலகில் அமைதியான முறையில் மாற்றங்கள் நிகழ்வதாக நம்ப வைக்க முயல்வது யுனிசெவ் ஆபிரிக்காவைப் பாருங்கள் என்றார் யுனிசெவ் இய

யால் மடிகின்றனர் உலகில் இப்படியான நிலைகள் இருக்கும் போது அமைதியான மாற்றங்கள் நடைபெறுவதாகக் கூறுகிறீர்களே?'' என்று ஒரு பத்திரிகையாளர் கேள்விக்கணை தொடுத்தபோது, ''இதெல்லாம் வழக்கமாக நடைபெறுவதில்லை. அசாதாரணமான நிலைமைகள்' என்றார் யுனிசெவ் இயக்குனர்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் அரவணைப்பில்

மண்ணின் மடியில்

25-05-1971 02-09-1991

## 2 ஆம் லெப்டினன்ட் விஸ்வம்

[வீரசிங்கம் சிவராஜ்]

ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை உன் நினைவு
மீண்டுதான் வாராயோ-சிவா
மீள எமைப் பார்ப்பதற்கு
விடுதலைப் போரிலே இணைந்து-நீ
மணலாற்றில் வீர காவியம் படைத்தாய்
மனந்தனில் நீ கொண்ட உறுதி
விரைவில் மலர்ந்திடும் தமிழீழமாக
மகனே! நீ மடியவில்லை!

வரலாறு படைத்த மணலாற்றுப் போரில் உன்னோடு வீரசுவர்க்கம் அடைந்த அனைத்து மாவீரர்களின் நினைவுகளையும் எங்கள் இதயத்தால் ஏந்திக் கொள்கின்றோம்

இன்று (20-09 92) எமது இல்லத்தில் இடம்பெறும் 'திதி' கிரியை நிகழ்வில் கலந்துகொள்ள சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

பாசமுள்ள அப்பா, அம்மா,
அன்புத் தங்கை, தம்பி

(3255)





# மங்களகரமான ஆரம்பம்

**தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி எமது கிளை**

## சுகுணாஸ் புடைவை மாளிகை

இல. 29, நவீன சந்தை [உட்புறம்] யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நாளை மதியம் 12.05 சுபவேளையில் ஆரம்பிக்கப்படுகிறதுஎன்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

**சுகுணாஸ் புடைவை மாளிகை**
இல. 2C, அர்ச்சனாவீதி, [ஸ்ரான்லி] யாழ்ப்பாணம். (3251)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5714

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
26-4727, 41-6893, 41-4194, 24-5774, 26-1343, 28-1730, 27-8959, 27-5217, 40-2295, 27- 493, 24-4103, 28-4550, 27-9771, 42- 732, 27-9030, 27-5099, 26- 835, 24- 521,

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-5846, 26-8936, 26-5857, 27-7263, 42-9625, 24-5063,


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.